# வள்ளுவன் தமிழ் மையம்

*Valluvan Tamil Academy*

## ஆத்திசூடி போட்டி விதிமுறைகள் - 2025-2026

**Aathichoodi Competition Guidelines – 2025-2026**

---

***பொதுவான விதிமுறைகள்:***

- *போட்டி விதிமுறைகள் பிரிவுக்கு ஏற்ப மாறுபடும். தயவுசெய்து உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவில் கவனம் செலுத்துங்கள்.*
- *அனைத்துக் குழந்தைகளும் தங்கள் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஆத்திசூடி எண்ணிக்கையை சொல்லி முடித்ததும் நிறுத்திவிட வேண்டும்.*
- *ஒவ்வொரு பிரிவின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விட அதிகமாக ஆத்திசூடியைப் பாராயணம் செய்யுமாறு குழந்தைகளைத் தயவுசெய்து பயிற்றுவிக்க வேண்டாம்.*

**பிரிவு 1 (இளமழலை & மழலை) - விதிமுறைகள்:**

- *கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திசூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்சிசூடிகளை ஒப்புவிக்கவும்.*
- *ஆத்திசூடிகளுக்கு பொருள் சொல்ல வேண்டிய தேவையில்லை.*
- *ஒவ்வொரு ஆத்திசூடிக்கும் 1 புள்ளி வழங்கப்படும்.*
- *ஒவ்வொரு போட்டியாளருக்கும் 2 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.*
- *இரண்டு நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.*
- *சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.*
- *போட்டியாளர்கள் இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திசூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.*

**பிரிவு 2 (நிலை 1)- விதிமுறைகள்:**

- *கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திச்சூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்சிசூடிகளை ஒப்புவிக்கவும்.*
- *5 ஆத்திசூடிகளுக்கு பொருள் சொல்ல வேண்டும்.*
- *ஒவ்வொரு ஆத்திசூடிக்கும் 1 புள்ளி வழங்கப்படும்.*
- *ஒவ்வொரு ஆத்திசூடி பொருளுக்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும்.*
- *ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.*
- *மூன்று நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.*
- *சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.*
- *போட்டியாளர்கள் இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திசூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.*

-----------------------------------------------------------------------------------------

**பிரிவு 3 (நிலை 2)- விதிமுறைகள்:**

- கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திசூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்சிசூடிகளை ஒப்புவிக்கவும்.
- 10 ஆத்திசூடிகளுக்கு பொருள் சொல்ல வேண்டும்.
- ஒவ்வொரு ஆத்திசூடிக்கும் 1 புள்ளி வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஆத்திசூடி பொருளுக்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.
- மூன்று நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.
- சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.
- போட்டியாளர்கள் இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திசூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.

***சமநிலை முறிவு:***

- *மேற்கூறிய அனைத்துப் பிரிவுகளுக்கும் சமநிலை முறிவு விதி பொருந்தும்.*
- *சமநிலை ஏற்படும் பட்சத்தில், சமநிலை முறிவுச் சுற்றுக்கு வரும் போட்டியாளர்கள், கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திசூடிகளில் ஒன்றைத் தழுவி ஒரு நீதி போதிக்கும் கதையைக் கூற வேண்டும்.*
- *கதை சொல்லும் நேரம் **1** நிமிடத்திற்குள் இருக்க வேண்டும்.*

Aathichoodi competition introduces our rich literature to the younger generation. This competition is for **Ilamazhalai** and **Mazhalai** (Category 1), **Nilai 1** (Category 2) and **Nilai 2** (Category 3).

**General Guidelines:**

- The rules change based on category. Please pay attention to your assigned category.
- All kids should stop when they reach the maximum number of Aathichoodi allowed in their category.
- Please do not coach the kids to recite more than the number of Aathichoodi mentioned under each category.

**Rules for Ilamalazhi and Malazhai:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for Aathichoodi is not required.
- Each Aathichoodi carries 1 point.
- Each participant will be given 2 minutes. There is a grace period of 1 minute.
- At the end of 2 minutes, the 1st timer will ring.
- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

வள்ளுவன் தமிழ் மையம்
*Valluvan Tamil Academy*

# ஆத்திசூடி போட்டி விதிமுறைகள் - 2025-2026
**Aathichoodi Competition Guidelines – 2025-2026**

---

**Rules for Nilai 1:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for minimum 5 Aathichoodi is required.
- Each Aathichoodi carries 1 point.
- Each Aathichoodi meaning carries 3 points.
- Each participant will be given 3 minutes. There is a grace period of 1 minute.
- At the end of 3 minutes, the 1st timer will ring.
- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

**Rules for Nilai 2:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for minimum 10 Aathichoodi is required.
- Each Aathichoodi carries 1 point.
- Meaning for each Aathichoodi carries 3 points.
- Each participant will be given 3 minutes. There is a grace period of 1 minute.
- At the end of 3 minutes, the first timer will ring.
- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

**Tie-Breaker:**

- The tie-breaker rule applies to all the above categories.
- If we encounter a tie breaker, then the participants who enter the tie-breaker round will be expected to tell a moral story related to one of the aatchichoodi from the below list.
- The story telling should not exceed more than 1 minute.

# ஆத்திசூடி பட்டியல்

| ஆத்திசூடி | விளக்கம் |
|---|---|
| பழிப்பன பகரேல் | பெறியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய்,கடுஞ்சொல் ஆகியவற்றை பேசாதே |
| பாம்பொடு பழகேல் | பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே. |
| பிழைபடச் சொல்லேல் | குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே |
| பீடு பெற நில் | பெருமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில். |
| புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ். |
| பெரியாரைத் துணைக் கொள் | அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத் துணையாகப் பேணிக்கொள். |
| பேதைமை அகற்று | அறியாமையை போக்கு. |
| பையலோடு இணங்கேல் | அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே |
| பொருள்தனைப் போற்றி வாழ் | பொருள்களை(செல்வம் உட்பட)வீண் செலவு செய்யாமற் பாதுகாத்து வாழ். |
| போர்த் தொழில் புரியேல் | யாருடனும் தேவையில்லாமல் சண்டை போடுவதை ஒரு வேலையாக செய்யாதே. |
| மனம் தடுமாறேல் | எதனாலும் மனக்கலக்கம் அடையாதே. |
| மாற்றானுக்கு இடம் கொடேல் | பகைவன் உன்னை துன்புறுத்தி உன்னை வெல்வதற்க்கு இடம் கொடுக்காதே |
| மிகைபடச் சொல்லேல் | சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்தைகளால் பெரிதாகக் கூறாதே |
| மீதூண் விரும்பேல் | மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே. |
| முனைமுகத்து நில்லேல் | எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காக போர் முனையிலே நிற்காதே. |
| மூர்க்கரோடு இணங்கேல் | மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே |
| மேன்மக்கள் சொல் கேள் | நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட |
| மொழிவது அற மொழி | சொல்லப் படும் பொருளை சந்தேகம் நீங்கும் படி சொல். |
| மோகத்தை முனி. | நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்திடு |